உடற்குறையுள்ளோர்மீது அக்கறை கூடினாலும் வேலைவாய்ப்புகள் கிட்டவில்லை: ஆய்வு

By ரவி சிங்காரம்

**Tamil Murasu, Page 2, Section:** தமிழ் முரசு
**Tuesday 18 November 2025**
**267 words, 135cm² in size**
**8,400 circulation**

Concern for people with disabilities doesn't lead to more jobs: SMU study

# உடற்குறையுள்ளோர்மீது அக்கறை கூடினாலும் வேலைவாய்ப்புகள் கிட்டவில்லை: ஆய்வு

**ரவி சிங்காரம்**

அனைவரையும் உள்ளடக்கும் சமூகத்தை உருவாக்குவதுபற்றிச் சிங்கப்பூரர்கள் அதிக அக்கறைக் கொண்டிருந்தாலும், அதை வேலைவாய்ப்பாக மாற்றும் பாதை இன்னும் கடினமாகவே உள்ளதாக சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் (எஸ்எம்யு) புதிய ஆய்வு குறிப்பிடுகிறது.

சிங்கப்பூரில், உடற்குறையுள்ளோருக்கான வேலைவாய்ப்புக் கொள்கைகள் நடுத்தர அளவைவிடக் குறைவாகப் பயனளிப்பதாக உடற்குறையுள்ளோரும் பொதுமக்களும் கூறியுள்ளனர். 2030க்குள் ஏற்படவுள்ள எதிர்கால மேம்பாடுகளும் குறைவே என அவர்கள் கூறுகின்றனர்.

உடற்குறையுள்ளவர்களே சக உடற்குறையுள்ளோரைப் பணியமர்த்துவதற்குச் சிறிதளவு தயாராக உள்ளதாகக் கூறினர்.

‘எங்கேஜ்மீ’ எனும் இந்த ஆய்வுக்கு ‘எஸ்எம்யு’ புள்ளியியல் துறை முதன்மை விரிவுரையாளர் ரோசி சிங் தலைமையேற்று, சிங்கப்பூர்க் பார்வையற்றோர் சங்கம் (SAVH), காதுகேளாதோர் சங்கம் (SADeaf), எஸ்எம்யு புள்ளியியல் மாணவர்கள் 208 பேர் ஆகியோரின் ஆதரவுடன் நடத்தியுள்ளார்.

பார்வையற்றோர், செவித்திறன் குறைபாடுடையோர், இதர உடற்குறைகள் கொண்டுள்ளோர், உடற்குறையுள்ளோருடன் பணியாற்றுவோர் அல்லது தொண்டாற்றுவோர், பொதுமக்கள் என ஏறத்தாழ 7,265 பேர், ஜூலையில் தொடங்கிய இரு மாதக் கருத்தாய்வில் பங்கேற்றனர்.

“நல்லெண்ணம் இருக்கிறது. ஆனால் அணுகுமுறை இல்லாமல் நல்லெண்ணம் வேலைவாய்ப்பாக மாறாது. கதவைத் திறந்ததாகச் சொன்னாலும், அது பாதியளவே திறந்திருப்பதை நாங்கள் புள்ளிவிவரங்களில் பார்க்கிறோம்,” என்றார் விரிவுரையாளர் ரோசி.

ஆய்வின் கண்டுபிடிப்புகளை மாணவர்கள் எஸ்எம்யுவில் நவம்பர் 17ஆம் தேதியன்று படைத்தனர்.

வேலை என்பது பொருளீட்டுவது பற்றியது மட்டுமல்ல; கௌரவமான வாழ்வை நடத்துவது பற்றியதும் என்றார் நிகழ்ச்சிக்கு வந்த ஜாலான் புசார் குழுத்தொகுதி (கம்போங் கிளாம்) ஆலோசகரும் மத்திய வட்டார மேயருமான டென்னிஸ் புவா.

“வேலை செய்வது என்பது, பகுதிநேரமாக இருப்பினும், உடற்குறையுள்ளோருக்கு அர்த்தமுள்ளது. அதன்வழி அவர்களால் வெளியே சென்று, பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த முடிகிறது; சக ஊழியர்களுடன் உணவருந்த முடிகிறது. நிதிச் சுதந்திரம் முக்கியம் என்பதுபோல வேலையினால் கிடைக்கும் அடையாளமும் பயன்களும் முக்கியம்,” என்றார் அவர்.

அலுவலகங்களின் நேரடி, தொழில்நுட்ப, சமுதாய ரீதியான அணுகல் வசதிகள் 50 விழுக்காட்டுக்கும் குறைவாக உள்ளதென, பாதிக்கும் மேற்பட்ட உடற்குறையுள்ளோர் கூறினர். தொழில்நுட்ப ரீதியான அணுகலே ஆகப் பின்தங்கியதாகக் கருதப்பட்டது.

உடற்குறையுள்ளோரில் 80 விழுக்காட்டினர் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சித் திட்டங்கள்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லையெனக் கூறினர். மூவரில் இருவருக்கு உடற்குறையுள்ளோரைப் பணியமர்த்துவதற்கான மானியங்கள் பற்றித் தெரியவில்லை.

rsingaram@sph.com.sg

Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.